# பணி நிறைவுக்கு வாழ்த்து!

நாள்: 31-07-2022

## திருமதி பரணி கிருஷ்ண மூர்த்தி!

சுங்கத்தில் சிலகாலம் சுவைமிக்க பணியும் கொண்டு,
எங்கடமைத் தமிழென்றும் இயைந்து நடக்கையிலே,
வங்கக் கடலையில் வார்த்தெடுத்த அன்பினோடு,
அங்கமாய் பலரின் நட்பு அடுத்தடுத்துக் கண்டதுண்டு!

தங்கமாய்ப் பலரின் அன்பில்  நாளும் தோய்ந்ததுண்டு!
தங்கடமை என்பதிலே சிலரிடத்தில் வியப்பும் கண்டேன்!
எங்கிருந்தும் எவர்மாட்டும் பிறழேன் என்னும் நிலைப்பாடு,
அங்கங்கே கண்டு யானும் பலநாள் வியந்ததுண்டு!

அங்கமாய் தமிழும் என்னுள் ஆழ்ந்து நிறைந்ததினால்,
பொங்கும் புதுப் புனலாய்ப் பலரிடத்தில் நட்பு கொள்வேன்!
மங்காத நட்பின்சீர் மருவிலாச் சிலருள் ஒருவராம்,
மெங்கள் **பரணி கிருஷ்ணமூர்த்தி** கண்டதாம் பணிநிறைவு!

தங்கமாய் அவரும் நோய் நெடியற்று, நெடிது வாழ்க!
சிங்கமகன் **சுரேஷ்** தாமும் சீராகப் பலவும் பெற்றிட,
அங்கமாய் கைத்தலம் பற்றிய மணாளனுடன் நிறைந்து,
தங்கமாய்ப் பெயரன் பெயர்த்தியுடன் வாழ்க தழைந்து!
அன்புடன்,
**கு.ப. அசோகன்,**
30-08-2022

